# ஆகஸ்ட் - 14- திங்கள்

### புனித மக்ஸ்மிலன் மேரி கோல்பே

**என் மக்களே! என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்: என் வாய்மொழிகளுக்குச் செவிகொடுங்கள். திபா. 78:1**

## முதல் வாசகம்: இணைச்சட்டம் 10: 12 – 22

எனவே இஸ்ரயேலரே, உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி, அவர்தம் அனைத்து வழிகளிலும் நடந்து, அவர் மீது அன்புகூர்ந்து, உங்கள் முழு இதயத்தோடும் உங்கள் முழு உள்ளத்தோடும் அவருக்குப் பணிபுரிந்து,உங்களுக்கு எல்லாம் நலமாகும் பொருட்டு நான் இன்று கற்பிக்கின்ற அவர்தம் கட்டளைகளையும் நியமங்களையும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்பதன்றி, அவர் உங்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்கின்றார்?விண்ணும் விண்ணின் வானங்களும், மண்ணும் அதில் உள்ள அனைத்தும் உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு உரியன.இருப்பினும், உங்கள் மூதாதையரின்மீது பற்றுவைத்து அன்பு கூர்ந்தார். அவர்களுக்குப் பின் அவர்களுடைய வழிமரபினராகிய உங்களை எல்லா மக்களினங்களினின்றும், இந்நாளில் இருப்பதுபோலத் தெரிந்துகொண்டார்.ஆகவே, உங்கள் உள்ளத்தை விருத்த சேதனம் செய்யுங்கள். வணங்காக் கழுத்தினராய் இராதீர்கள்.ஏனெனில், உங்கள் கடவுளாகிய ஆண்டவரே, தெய்வங்களுக்கெல்லாம் கடவுள், இறைவாக்கெல்லாம் இறைவன். மாட்சியும் ஆற்றலும் உள்ள அஞ்சுதற்குரிய கடவுள் அவரே. அவர் ஓர வஞ்சனை செய்வதில்லை கையூட்டு வாங்குவதும் இல்லை.. அனாதைகளுக்கும் கைம்பெண்களுக்கும் நீதி வழங்குபவர் அவரே. அன்னியர்மேல் அன்புகூர்ந்து அவர்களுக்கு உணவும் உடையும் கொடுப்பவர் அவரே. அன்னியருக்கு அன்பு காட்டுங்கள் ஏனெனில் எகிப்தில் நீங்களும் அன்னியராய் இருந்தீர்கள்.உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே அஞ்சுங்கள் அவருக்கே பணிபுரிந்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். அவர் பெயராலே ஆணையிடுங்கள்.அவரே உங்கள் புகழ்ச்சி! அவரே உங்கள் கடவுள்! உங்கள் கண்கள் கண்ட ஆற்றல்மிகு அச்செயல்களை உங்களுக்காகச் செய்தவர் அவரே.உங்கள் மூதாதையர் எழுபது ஆள்களாய் எகிப்துக்குப் போனார்கள். இப்பொழுதோ உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களை வானத்து விண்மீன்கள் போல் பெருகச் செய்துள்ளார்.

**பதில்பாடல்:** எருசலேமே கடவுளாம் ஆண்டவரைப் புகழ்வாயாக

## நற்செய்தி : மத்தேயு 17 : 22 – 27

அக்காலத்தில் கலிலேயாவில் சீடர்கள் ஒன்று திரண்டிருக்கும்போது இயேசு அவர்களிடம், "மானிட மகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார்.அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள் ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் துயரடைந்தார்கள்.அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்த போது கோவில் வரியாக இரண்டு திராக்மா தண்டுவோர் பேதுருவிடம் வந்து, "உங்கள் போதகர் இரண்டு திராக்மா வரியைச் செலுத்துவதில்லையா? என்றுகேட்டனர்.அவர், "ஆம், செலுத்துகிறார்" என்றார். பின்பு வீட்டிற்குள் வந்து பேதுரு பேசத் தொடங்குவதற்கு முன்பே இயேசு, "சீமோனே உனக்கு எப்படித் தோன்றுகிறது? இவ்வுலக அரசர்கள் சுங்க வரியையோ தலைவரியையோ யாரிடமிருந்து பெறுகின்றார்கள்? தங்களுடைய மக்களிடமிருந்தா? மற்றவரிடமிருந்தா?" என்றுகேட்டார். "மற்றவரிடமிருந்துதான்" என்று பேதுரு பதிலளித்தார். இயேசு அவரிடம், "அப்படியானால் குடிமக்கள் இதற்குக் கட்டுப்பட்டவரல்ல. ஆயினும் நாம் அவர்களுக்கு தடையாய் இருக்கக் கூடாது. எனவே நீ போய்க் கடலில் தூண்டில் போடு முதலில் அகப்படும் மீனை எடுத்து அதன் வாயைத் திறந்து பார்த்தால் ஸ்தாத்தேர் நாணயத்தைக் காண்பாய். ஆதை எடுத்து உன் சார்பாகவும் என் சார்பாகவும் அவர்களிடம் செலுத்து" என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்களானது இறைவன்மேல் அன்பு கொண்டு எவ்வாறான சூழ்நிலையிலும் நாங்கள் வாழ்ந்தாலும் அவரது நியமங்களையும், கட்டளைகளையும் கடைப்பிடித்து நன்றி கூறி மகிமைப்படுத்த வேண்டுமென்று கூறுகின்றது. "அன்பு" "நன்றி" என்பது எமது வாழ்க்கையில் அரிதாகவே காணப்படுகின்றது. காரணம் புரிந்துணர்வு, போட்டி, பொறாமை, நான் என்ன கர்வத்துடன் சுயநலம் கொண்டவர்களாக வாழ்ந்துகொண்டிருப்பதே ஆகும். இவை எமது வாழ்க்கையில் நின்று விடுபட்டு தன்னலத்துடன் வாழாமல் பிறர்நலம் கொண்டவர்களாக வாழவேண்டும். அன்று நல்ல சமாரியன் வீதியிலே குற்றுயிராய்க் கிடந்தவருக்கு உதவி செய்து இறைவன் அருளைப் பெற்றக்கொண்டாரோ அதேபோன்று நேயுற்றவருக்கோ, பண உதவி தேவைப்படுவோருக்கோ, சரீர உதவி தேவைப்படுவோருக்கோ ஏதுவாக இருந்தாலும் நான் என்ற சுயநலம் கொண்டு வாழாமல் நாங்கள் என்ற பிறர்நலம் கொண்டவர்களாக மற்றவர்களை அன்பு செய்து இறைவனது நியமங்களை அனுசரித்து வாழ எங்களைத் தயார்படுத்தவோம்.